தினமணி

10 ஆண்டு தரிசாக இருந்தால்தான் அனுமதி: விவசாய நிலத்தைக் காப்பாற்ற புதிய கட்டுப்பாடு

First Published : 11 Feb 2011 03:00:53 AM IST
Last Updated : 11 Feb 2011 04:56:28 AM IST



சென்னை,பிப்.10: விவசாய நிலங்களை வீட்டுமனைகளாக விற்பதால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுவதைத் தடுக்க புதிய கட்டுப்பாடு விதிக்க மாநில அளவிலான விலை கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

விளைநிலங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த, 3 ஆண்டுகள் அந்த நிலம் தரிசாக இருக்க வேண்டும் என்ற காலவரையறை இப்போது உள்ளது. இதை 10 ஆண்டுகள் தரிசாக இருந்தால்தான் வேறு பயன்பாட்டிற்கு உபயோகிக்க அனுமதிக்கலாம் என்று திருத்த வேண்டும் என பரிந்துரைக்க இக் குழு முடிவு செய்துள்ளது.

மாநில அளவிலான விலை கண்காணிப்புக் குழு கூட்டம் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடந்தது. விலைவாசி நிலவரம் குறித்து உணவுத் துறை அமைச்சர் எ.வ. வேலு அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் செயலாளர் எஸ். மாலதி, கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் ஸ்வரண் சிங், நிதித் துறை முதன்மைச் செயலாளர் க. சண்முகம், வேளாண்மைத் துறை ஆணையாளர் அதுல் ஆனந்த் உள்ளிட்டோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பியுள்ள கோரிக்கைகளான விலைவாசி நிலைப்படுத்தும் நிதியம் அமைத்தல், மத்திய அரசு மானிய விலையில் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வகைகளை வழங்கும் திட்டத்தினை 31.12.2012 வரை நீடித்தல், நியாயவிலைக் கடைகள் மற்றும் கிடங்குகள் கட்ட 50 சதவீத மானியத்தில் நிதி ஒதுக்கீடு போன்ற கோரிக்கைகளை உடனடியாகச் செயல்படுத்த மத்திய அரசைக் கோர இக் குழு முடிவு செய்தது.

அரிசி, சர்க்கரை, தனியா, புளி, பூண்டு மற்றும் மிளகாய்க்கு முன்பேர வர்த்தகத்தில் இருந்து விலக்களித்தல், அத்தியாவசியப் பொருள்களின் இருப்பு வரம்பினை நிர்ணயித்தல், உழவர் சந்தைகளை அமைக்க நிதியுதவி அளித்தல் ஆகிய கோரிக்கைகளையும் வலியுறுத்த இக் குழு முடிவு செய்திருக்கிறது.

ஒவ்வொரு வட்டத்திலும் கூட்டுறவுத் துறை மூலம் அத்தியாவசியப் பொருள்களை இருப்பு வைத்து விற்க நடவடிக்கை மேற்கொள்ளவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவும், காய்கறிகளைச் சேமிக்க குளிர் சாதனக் கிடங்குகளை அமைத்துத் தர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் குழு பரிந்துரை செய்துள்ளது.

**ராஜராஜன் நெல் சாகுபடி: சொட்டு நீர் பாசனம் குறித்து ஆய்வு**

First Published : 10 Feb 2011 12:35:07 PM IST

திருச்செங்கோடு, பிப்.9: திருச்செங்கோடு வட்டம், பள்ளிபாளையத்தில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம் அமைப்பது குறித்து கோவை எல்ஜி நிறுவன வல்லுநர் குழு செவ்வாய்க்கிழமை ஆய்வு நடத்தியது.

÷நிறுவன இயக்குநர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் கோபாலகிருஷ்ணன், மூத்த மேலாளர் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் கொண்ட குழுவினர், பள்ளிபாளையம் வட்டாரத்தில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களைப் பார்வையிட்டனர்.

÷அப்போது, செம்மை நெல் சாகுபடிக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்தும், இதன் மூலம் சாகுபடி பரப்பை அதிகரித்து கூடுதல் மகசூல் பெறுவது குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

÷பள்ளிபாளையம் வேளாம் உதவி இயக்குநர் பா.முரளீதரன், துணை வேளாண் அலுவலர் ஞானபிரகாசம், ராஜராஜன் நெல் சாகுபடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நெல் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

First Published : 10 Feb 2011 12:49:37 PM IST

திருவாடானை, பிப். 9: திருவாடானை தாலுகாவில் நெல் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

திருவாடானை தாலுகாவில் சுமார் 1 லட்சத்து 27ஆயிரம் ஹெக்டேரில் நெல்

பயிரிடப்பட்டுள்ளது.

கதிர் விடும் நிலையில் தொடர் மழையாலும், நெல் பழம் என்னும் கொடிய நோயால் தாக்கப்பட்டதால் மகசூல் பாதிக்கப்பட்டது.

தற்போது அறுவடை செய்து வரும் நெல்லை தனியார் வியாபாரிகள் மூட்டை 600 ரூபாய்க்கு வாங்குவதால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி

பில்லூர் ராமனாதன் கூறுகையில், இந்த ஆண்டு சம்பா பருவத்தில் விவசாயிகள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்துள்ளனர்.

தற்போது இந்த நெல் மூட்டை ஒன்றுக்கு 600 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்குவதால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். கடந்த ஆண்டு இதே தருணத்தில் மூட்டை ஒன்று ஆயிரம் ரூபாய்க்கு விற்றது.

எனவே அரசு தனிக்கவனம் செலுத்தி நெல்லை கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 109.82 அடி**

First Published : 10 Feb 2011 01:33:53 PM IST

தஞ்சாவூர், பிப். 9: மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 109.82 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 1,702 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்துக்கு ரூ. 40 லட்சம் ஒதுக்கீடு**

First Published : 10 Feb 2011 01:31:28 PM IST

அரியலூர், பிப்.9: அரியலூர் மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள நிலமற்ற ஆதிதிராவிட மகளிர் நிலம் வாங்கி, பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் வகையில்,

மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்துக்காக தாட்கோ மூலம் அரசு ரூ. 40 லட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள நிலமற்ற ஆதிதிராவிட மகளிர் நிலம் வாங்கி பயிர் செய்து, பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கில், தமிழக அரசு மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் என்ற திட்டத்தை தாட்கோ மூலம் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் இந்தத் திட்டத்துக்காக நடப்பு நிதியாண்டில் அரியலூர் மாவட்டத்துக்கு ரூ. 40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ரூ. 10 லட்சம் மானியமாக நிலம் வாங்குவதற்கும், ரூ. 10 லட்சம் நில அபிவிருத்தி செய்வதற்கும் மானியமாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தனது குடும்பத்தில் யார் பெயரிலும் நிலம் இல்லாத மகளிர் அதிகபட்சமாக 2.50 ஏக்கர் நஞ்சை நிலமோ அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலமோ வாங்கிக் கொள்ளலாம்.

நிலம் வாங்குவதற்காக ஒரு லட்சம் நிர்ணயம் செய்து, அதில் ரூ.50,000 மானியத்தை விடுவிக்கவும், அவ்வாறு வாங்கிய நிலத்தை பயிர் செய்ய ஏற்ற வகையில் அமைத்துக் கொள்ளவும், நீர்ப்பாசன வசதி செய்து கொள்ளவும் நில மேம்பாடு திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் கடனாக நிர்ணயம் செய்து, இதில் ரூ.50,000 மானியமாக விடுவிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடன் தொகை நிர்ணயம் செய்தலில் அரசு நிர்ணய விலையினையே கணக்கில் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆதிதிராவிடர் அல்லாத மற்ற இனத்தவரிடமே நிலம் வாங்க வேண்டும். விண்ணப்பதாரர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவராகவும், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவராகவும் இருப்பதோடு, 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 55 வயதுக்குள்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பயனடையும் நபருக்கு பத்திரப் பதிவு கட்டணத்தில் 100 சத விலக்கு அளிப்பதுடன், மின் இணைப்பு தேவைப்படுவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் தாட்கோ மூலம் ரூ. 10,000 தொகை மின்வாரியத்துக்கு செலுத்தி மின் இணைப்பு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுள்ள நபர்கள் பிப்ரவரி 20 ஆம் தேதிக்குள் தங்களது ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலரை (ஆதிதிராவிடர்) அணுகி தகுதிக்கான ஜாதிச் சான்று, வருமானச் சான்று, குடும்ப அட்டை போன்ற அசல் சான்றுகளை காண்பித்து விண்ணப்பத்தை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். மேலும் தகவல் தேவைப்படுவோர் மாவட்ட மேலாளர், தாட்கோ, அரியலூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**தம்மம்பட்டி உழவர் சந்தை: 56 நாள்களில் ரூ.63 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை**

First Published : 10 Feb 2011 12:36:26 PM IST

தம்மம்பட்டி. பிப்.9: சேலம் மாவட்டம் தம்மம்பட்டி உழவர் சந்தையில் 56 நாள்களில் ரூ.63 லட்சத்திற்கு காய்கறி விற்பனை நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

÷இது குறித்து தம்மம்பட்டி வேளாண் அலுவலர் கருணாநிதி, வேளாண் உதவி அலுவலர் சரவணன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

÷2010-ம் ஆண்டு டிசம்பர் 19-ம் தேதி தொடங்கப்பட்ட தம்மம்பட்டி உழவர் சந்தையில் வெளி மார்க்கெட்டை விடக் குறைந்த விலையில் காய்கறிகள் கிடைப்பதால் சந்தைக்கு வரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

÷பிப்ரவரி 9-ம் தேதி வரை, அதாவது சந்தை தொடங்கிய 56 நாள்களில் 1 லட்சத்து 11 ஆயிரத்து 233 பேர் காய்கறிகளை வாங்கிச் சென்றுள்ளனர். 3 லட்சத்து 70 ஆயிரத்து 478 கிலோ காய்கறி விற்பனையாகியுள்ளது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.63 லட்சத்து 27 ஆயிரத்து 605.

÷இதுவரை 2145 விவசாயிகள் தம்மம்பட்டி உழவர் சந்தையில் காய்கறி விற்பனையில் ஈடுபட்டுள்ளதாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க வேண்டும்'**

First Published : 10 Feb 2011 02:11:25 PM IST

திருநெல்வேலி, பிப். 9: விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என, ஆட்சியர் மு. ஜெயராமன் கேட்டுக் கொண்டார்.

களக்காடு ஊராட்சி ஒன்றியம் கள்ளிக்குளத்தில் புதன்கிழமை நடைபெற்ற மனுநீதி நாள் முகாமுக்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசியதாவது:

இப் பகுதியில் பெரும்பாலான நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் உள்ளன. தண்ணீர் வசதி உள்ள இம் மாவட்டத்தில் நிலத்தை இப்படி தரிசாகப் போடக் கூடாது. ராஜஸ்தான் மாநிலத்தில் 30 சதவிகித தண்ணீர்தான் கிடைக்கிறது. ஆனால், அம் மாநில விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்கின்றனர். அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கி தங்கள் தேவையை தாங்களே பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

இம் முகாமில் பங்கேற்ற வேளாண்மை துறை அதிகாரிகள் துல்லிய பண்ணைத் திட்டம் குறித்து விளக்கினார்கள். துல்லிய பண்ணை அமைப்பதன் மூலம் ஓர் ஏக்கர் நிலத்தில் 60 டன் கரும்பு

உற்பத்தி செய்ய முடியும். துல்லிய பண்ணை முறையை மேற்கொண்டால் இப் பகுதியில் விவசாயம் செழிக்கும். விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

பின்தங்கிய மாவட்டமான கிருஷ்ணகிரியில் விவசாயிகள் துல்லிய பண்ணைத் திட்டத்தை மேற்கொண்டு நல்ல மகசூல் பெறுகின்றனர். விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்து பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளனர். அதேபோல, இப் பகுதி விவசாயிகளும் தங்கள் நிலங்களில் மா, நெல்லி, கொய்யா போன்ற மரங்களை வளர்த்து பயன்பெறலாம்.

இங்கே பேசியோர் வடக்கு பச்சையாறு மூலம் 9 குளங்கள் நீர்ப்பாசன வசதி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். கடையநல்லூர் பாப்பான்குளம் கால்வாயில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 36 குளங்கள் நீர் நிரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுமார் 2,200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. அதேபோல, வடக்கு பச்சையாறு மூலம் குளங்கள் பாசன வசதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

முகாமில், அரசுத் துறைகளின் நலத்திட்ட உதவிகளையும் ஆட்சியர் வழங்கினார்.

முகாமையொட்டி பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 129 மனுக்களில் தகுதியுள்ள 97 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. 32 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

90 சதவிகித அலுவலர்கள் வருகை: ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கள்கிழமை நடைபெறும் மக்கள் குறைதீர் நாள் கூட்டம், விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், கிராமங்களில் நடைபெறும் மனுநீதி நாள் முகாம்களில் கடந்த காலங்களில் குறைவான எண்ணிக்கையிலேயே மாவட்ட அதிகாரிகள் பங்கேற்பர். அதிகாரிகளுக்குப் பதிலாக பெயரளவுக்கு கீழ்நிலை ஊழியர்கள் பங்கேற்பர். இதனால் அக் கூட்டங்களில் பொதுமக்கள் தெரிவிக்கும் குறைகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருந்தது.

இப்போது, ஆட்சியர் ஜெயராமன் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளாலும், கூட்டங்களுக்கு வராத அதிகாரிகள் மீது துறைசார் நடவடிக்கை மேற்கொண்டதாலும் இம் மனுநீதி நாள் கூட்டத்தில் 90 சதவிகித அலுவலர்கள் கலந்துகொண்டனர். முகாமில், மாவட்ட திட்ட இயக்குநர் அர. சங்கர், களக்காடு ஊராட்சி ஒன்றியத் தலைவர் தமிழ்ச்செல்வன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வானமாமலை, திருப்பதி, ஊராட்சி உறுப்பினர் மாரியம்மாள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சேரன்மகாதேவி கோட்டாட்சியர் (பொறுப்பு) செல்வராஜ் வரவேற்றார். நான்குனேரி வட்டாட்சியர் கதிரேசன் நன்றி கூறினார்.

**பால் உற்பத்தியைப் பெருக்க கறவை மாடுகளுக்கு சரிவிகித உணவு அவசியம்**

First Published : 10 Feb 2011 01:34:32 PM IST

கரூர், பிப். 9: பால் உற்பத்தியைப் பெருக்க பசுந்தீவனம், அடர்தீவனம், உலர்தீவனம் ஆகியவற்றை சரிவிகிதமாக கொடுக்க வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பா. சக்திவேல் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பால் உற்பத்தியாளர்கள், கறவை மாடு பராமரிக்கும் விவசாயிகள் தங்கள் கால்நடைகளின் நலனைக் காக்கும் பொருட்டு தீவனம் வழங்குவதில் கவனமாக இருக்க வேண்டும்.

பால் கறக்கும் மாடுகளுக்கு சரிவிகித தீவனமாக பசுந்தீவனம், அடர்தீவனம், உவர்தீவனம் ஆகியவற்றை சரிவிகிதமாக கொடுக்க வேண்டும். அடர்தீவனம் வழங்குவதால் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், மாட்டுக்குத் தேவையான புரதம், கொழுப்புச் சத்து கிடைக்கும். தீவனம் குறைவதால் பால் உற்பத்திக் குறைவதுடன், நீண்டகால தீமையாக பசுவின் சினைப்படும் சதமும் குறையும். இதனால், கன்று ஈனும் இடைவெளி அதிகரிப்பதுடன் நோய் எதிர்ப்புத் திறனும் குறையும்.

தீவனத்தை குறைத்து வழங்குவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு பெரிய அளவில் இருக்கும். எனவே, விவசாயிகள் தாங்கள் பசுவினங்களுக்கு தீவனங்களை சரிவிகிதத்தில் வழங்க வேண்டும். இதனால், பொருளாதார ஏற்றத்தைக் காண முடியும் என்றார் அவர்.

தினமலர்

**வேளாண் பல்கலையில் எப்.எம்., சேவை துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,02:02 IST

கோவை : கோவை வேளாண் பல்கலை, சமுதாய வானொலி நிலையம் சார்பில் எப்.எம்., ஒலிபரப்புச் சேவை துவங்கப்பட்டுள்ளது.

புதிய வானொலிக்கு "வேளாண் பல்கலைக்கழக விவசாயி எப்.எம்.,' என பெயரிடப்பட்டுள்ளது. இதன் ஒலிபரப்பு 107.4 பண்பலையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தினமும் காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை சமுதாய வானொலியில் விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. விவசாயிகளுக்கு பயனுள்ள தொழில் நுட்ப தகவல்கள், அன்றாட விளைபொருட்களின் விலை நிலவரங்கள், வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் இதர தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

பல்கலை வளாகத்தில் இருந்து 18 கி.மீ., தூரத்துக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் வானொலியின் ஒலிபரப்பை கேட்டு மகிழலாம். விவசாயம் மட்டுமல்லாமல், கால்நடை, மீன்

வளர்ப்பு, கிராம மேம்பாடு, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் அடங்கிய பல்வேறு நிகழ்ச்சிகள் பல்கலை விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன. விவசாயிகள், கிராமப்புற மகளிர், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், தொழில் முனைவோர், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் நிகழ்ச்சிகளை கேட்டு பயன் அடையலாம். நிகழ்ச்சிகள் குறித்து நேயர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்பினால், "விரிவாக்க கல்வி இயக்குனர், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோவை-641003' எனும் முகவரிக்கு கடிதம் மூலமாகவும், ஞீட்ஞு÷tணச்த.ச்ஞி.டிண என்ற இ-மெயில் முகவரி வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம்.

**ஏறுமுகத்தில் "பாக்கு' விலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:00 IST



**சேலம்:** சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வாழப்பாடி, சிங்கிபுரம், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர் மற்றும் ஆத்தூர் பகுதிகளில் பாக்கு அதிகளவில் விளைகிறது. அறுவடை செய்யப்படும் பாக்குகள் சேலம், பால் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. அங்குள்ள 60க்கும் மேற்பட்ட பெரிய வியாபாரிகள் பாக்கை கொள்முதல் செய்து, தரம் பிரித்து, வெளி மாநிலங்களுக்கு அனுப்புகின்றனர். தை மாதம் திருமண சீசன் என்பதால் பாக்கு தேவை தற்போது அதிகரித்துள்ளது. குறைந்த அளவே பாக்கு மார்க்கெட்டிற்கு வருவதால் வெட்டு பாக்கு, களிப்பாக்குகளின் விலை ஏறுமுகமாக உள்ளது. ஒரு கிலோ பாக்கு, ரக வாரியாக 200 ரூபாய் முதல் 290 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

"மலர் செடிகள்' பெற முன்பதிவு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:00 IST



**நீலகிரி:** ஊட்டி, தாவரவியல் பூங்காவில், வரும் மே மாதம் நடக்கும் கண்காட்சிக்காக, புதிய மலர் செடிகளை உருவாக்கும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. முதற்கட்டமாக, சால்வியா, டெல்பினியம், டேலியா, அஸ்டர், பெட்டோனியா, மேரி கோல்டு உள்ளிட்ட 200க்கும் அதிகமான ரக மலர் செடிகள் பூங்கா முழுவதும் நடவு செய்யப்பட்டு வருகின்றன. தற்போது, பனிக்கால மலரான "பவுலினியா' மலர் பூத்துக் குலுங்குகிறது. பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில், 8 ஆயிரம் மலர் தொட்டிகள், பல்வேறு அலங்காரங்களில் அமைக்கப்பட உள்ளன.

மலர் நாற்று தேவைப்படுவோர், ஊட்டி தாவரவியல் பூங்காவில் தங்கள் பெயர், போன் எண்களை பதிவு செய்ய வேண்டும். நாற்றுகள் தயாரானவுடன், பூங்கா நிர்வாகம் அவர்களை தொடர்பு கொண்டு, நாற்றுகளை வினியோகம் செய்யும். தற்போது, டெல்பினியம் மற்றும் சால்வியா நாற்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. இப்போது துவங்கி, மார்ச் வரை மலர் நாற்றுகள் விற்பனை இருக்கும்.

**நீரிழிவை குறைக்கும் "சீனி அவரைக்காய்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:00 IST



**மதுரை:** காய்கறிகளில் ஒன்றான சீனி அவரைக்காய், மருத்துவ குணம் கொண்டது. நீரிழிவு நோயை குணமாக்கும் சீனி அவரைக்காய், அதிகமான அளவில் நார்ச்சத்து, புரதச்சத்து, அமினோ அமிலங்கள் கொண்டது. இதன் விதையில் இருந்து தயாரிக்கப்படும் மாவுப்பொருளை கோதுமை மாவுடன் சேர்த்து பிசைந்தால், சப்பாத்தி, பூரி போன்றவை மிருதுவாகும். நீண்ட நேரம் கெடாமலும் இருக்கும்.

சீனி அவரைக்காய் விதைகளில் உள்ள நீர் உறிஞ்சும் தன்மையால், பேப்பர் மற்றும் உணவுப் பொருள் தயாரிப்பிலும் அவை பயன்படுத்தப்படுகின்றன. விதையின் உட்கருவில் இருந்து கால்நடைகளுக்கு உணவுப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. மேலும், நீரிழிவு நோய்க்கு மருந்து தயாரிப்பிலும் சீனி அவரைக்காயின் விதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ரத்தத்தில் உள்ள குளுகோஸ் அளவை குறைக்கும் திறன் இந்த விதைகளுக்கு அதிகமாக உண்டு. இவ்வளவு சிறப்பு வாய்ந்த சீனி அவரைக்காயை மானாவரி பயிராகவும் விளைவிக்கலாம்.

**"கிடை'போடும் மலையாடுகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:00 IST



**கடலூர்:** சிறுபாக்கம் மற்றும் வேப்பூரைச் சுற்றி 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்குள்ள விவசாய நிலங்களில் பெரும்பாலானவை மானாவாரியாகும். இந்த நிலங்களில் மக்காச்சோளம், பருத்தி, வரகு, மணிலா உள்ளிட்டவை பயிர் செய்யப்படுகின்றன. டிசம்பர், ஜனவரி மாதங்களில் இப்பயிர்களை அறுவடை செய்வது வழக்கம். அறுவடைக்குப் பின், நிலத்தை வளப்படுத்துவதில் விவசாயிகள் அக்கறை காட்டுகின்றனர். இதற்காக, மலையாடுகளின் சாணம் பயன்படுத்தப்படுகிறது. ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மலையாடுகள் ஆண்டுதோறும் இங்கு கொண்டு வரப்படுகின்றன. பின், ஒவ்வொரு விளைநிலத்திலும் ஆட்டு கிடைகள் போடப்படுகின்றன. இந்த ஆண்டு அறுவடை முடிந்துள்ளதால், கூட்டம் கூட்டமாக சிறுபாக்கம் பகுதிக்கு மலையாடுகள் வரத் துவங்கியுள்ளன. மேய்ச்சல் நேரம் போக மற்ற நேரங்களில் அவை கிடைகளில் அடைக்கப்படுகின்றன.

**திறந்தது விவசாயிகளுக்கே தெரியாத நேரடி நெல் கொள்முதல் நிலையம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:57 IST

செஞ்சி : செஞ்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்து ஒரு வாரம் முடிந்த பின்னரே விவசாயிகள் நெல் கொண்டு வந்தனர். செஞ்சி பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க கடந்த 1ம் தேதி கலெக்டர் பழனிசாமி உத்தரவிட்டார். இதையடுத்து திண்டிவனம் சாலையில் ஊரணித்தாங்கல் கிராமம் அருகே நுகர்பொருள் வாணிப கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மறுநாள் (2ம் தேதி) துவக்கினர். இது குறித்து எந்த அறிவிப்போ, விளம்பரமோ செய்யவில்லை.

இதனால் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந் தது விவசாயிகளுக்கு தெரியாமல் இருந்தது. நேற்று காலை திடீரென விளம்பர பலகை வைத்தனர். இதையடுத்து விவசாயிகள் இருவர் நெல் கொண்டு வந்தனர். இங்கு நெல் கொள்முதல் செய்ய ஒரு அலுவலரும், ஒரு உதவியாளரும் பணியில் உள்ளனர். சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன் றுக்கு 1,100 ரூபாயும், மோட் டாரக நெல்லுக்கு 1,050 ரூபாயும் வழங்குகின்றனர்.

**செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,01:05 IST

குளித்தலை: தோகமலை அருகே புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் கே.வி.கே., நபார்டு வங்கி சார்பில் செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி நடந்தது.
கரூர் நபார்டு வங்கி பொதுமேலாளர் பார்த்திபன் தலைமை வகித்து, விவசாயிகளுக்கான திட்டம் குறித்து பேசினார். சரஸ்வதி கே.வி.கே., மனையியல்துறை தொழில் நுட்ப வல்லுநர் அனிதா வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் திரவியம், பெட்டவாய்த்தலை சர்க்கரை ஆலை விவசாய பயிற்சி மேலாளர் ராம்குமார் ஆகியோர் செம்மை கரும்பு சாகுபடி மற்றும் தண்ணீர் தேவை, சர்க்கரை உற்பத்தி குறித்து பேசினர். மண்ணியல்துறை வல்லுநர் வள்ளியம்மை செம்மை கரும்பு சாகுபடி தொழில் நுட்பம், ஒருபெருசீவல் முறை, நாற்றங்கால் உற்பத்தி குறித்து பயிற்சியளித்தார். சிந்தலவாடி பஞ்சாயத்துக்கு உட்பட்ட மகிளிப்பட்டி பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

**சோழவந்தானில் நெல்கொள்முதல் மையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:06 IST

சோழவந்தான் : "தினமலர்' செய்தியின் எதிரொலியாக சோழவந்தானில் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் நெல்கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது, இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். சோழவந்தான், தென்கரை, முள்ளிப்பள்ளம், நாச்சிக்குளம், கருப்பட்டி, இரும்பாடி, ரிஷபம், மேலக்கால், ஊத்துக்குழி, நாராயணபுரம் உட்பட பல பகுதிகளில் தற்போது நெல் அறுவடை பரவலாக நடக்கிறது. அறுவடைக்கு முன்பே அரசின் சார்பில் நெல்கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, விவசாயிகள் லாபம் பெறும் வகையில் நிலையம் செயல்படும். தற்போது அறுவடை நடந்து 15 நாட்களுக்கு மேலாகியும், கொள்முதல் மையம் திறக்காததால் விவசாயிகள் தங்கள் பகுதி தெருக்களில் நெல்லை குவித்தும், மூடைகளில் அடுக்கியும் செய்வதறியாது கவலையில் இருந்தனர். இந்த நேரத்தை இடைத்தரகர்கள் பயன்படுத்தி, குறைந்த விலையில் வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய முயன்றனர். இதனால் பல ஆயிரம் ரூபாய் நஷ்டம்

ஏற்படுமோ, என்ற வருத்தமடைந்த விவசாயிகள் நெல்கொள்முதல் நிலையம் திறக்க அரசிடம் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் அவலநிலை குறித்து நேற்று "தினமலர்' இதழில் படத்தடன் செய்தி வந்தது. இதன் எதிரொலியாக நேற்று காலை 10 மணிக்கு மாவட்ட நுகர்பொருள் வாணிபகழகம் மூலம் சோழவந்தானில் உள்ள வாடிப்பட்டி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பில் சோழவந்தான் மற்றும் தென்கரையில் மையம் திறக்கப்பட்டது. இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தினமலர் இதழ்,கலெக்டர், அதிகாரிகளுக்கு நன்றி கூறினர்.
திறப்புவிழாவில் கலந்துகொண்ட கூட்டுறவு இணைபதிவாளர் டாக்டர் குமார் கூறுகையில், "சோழவந்தான், தென்கரை பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் லாபம் பெறும் வகையில் இந்த மையங்களை பயன்படுத்த வேண்டுகிறோம். சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு ஆயிரத்தி நூறு ரூபாயும், உருட்டு பெரிய ரக நெல் குவிண்டாலுக்கு ஆயிரத்தி ஐம்பது ரூபாயும் வழங்கப்படுகிறது. நேரடிகொள்முதல் செய்யப்படுவதால், இடைத்தரகர்களுக்கு இடம் இல்லை' என்றார்.

**பால் கூட்டுறவு சங்க பணியாளர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:57 IST

விழுப்புரம் : பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு பணியாளர்கள் சங்க கூட்டம் விழுப்புரத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். பணியாளர்கள் இணைய மாநில இணை செயலாளர் முனுசாமி சிறப்புரையாற்றினார். பழனிவேல், கலியமூர்த்தி, சம்பத், பால் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் ஹரிகரன், கலியமூர்த்தி உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

கூட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய முடியாது என பால்வளத்துறை அமைச்சர் சட்டசபையில் அறிவித்தார். இதை கண்டித்து நேற்று (10ம் தேதி) முதல் தற்செயல் விடுப்பு போராட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதையடுத்து நேற்று கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திண்டிவனம், செஞ்சி, வானூர் பால் கூட்டுறவு சங்க பணியாளர்கள் தற்செயல் விடுப்பு எடுத்து போராட் டத்தில் ஈடுபட்டனர்.

ரூ.1கோடி செலவில் இயற்கை நார் நெசவு குழுமம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,00:00 IST

முதல் முறையாக அனகாபுத்தூரில் அமைக்க முடிவு கே.எஸ்.வடிவேலு/அனகாபுத்தூர் நாட்டிலேயே முதல் முறையாக, சென்னையை அடுத்த அனகாபுத்தூரில், ஒரு கோடி ரூபாய் செலவில் இயற்கை நார் நெசவு மற்றும் கைவினைப் பொருட்கள் குழுமம் அமைக்க மத்திய அரசு நிறுவனமான எம்.எஸ்.எம்.இ., முடிவு செய்துள்ளது. வரலாற்று சிறப்புமிக்க காஞ்சிபுரம் மாவட்டத்தில் முக்கிய தொழிலாக நெசவு தொழில் இருந்தது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, இயந்திரங்களின் வருகை காரணமாக நெசவு தொழில் நசுங்கியது. ஆனால், காஞ்சிபுரம், குன்றத்தூர், அனகாபுத்தூர் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவுத் தொழிலில் ஏராளமானோர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில், அனகாபுத்தூர் சணல் நெசவாளர்கள், வாழை நார், கற்றாழை, புளிச்சகீரை உட்பட 25 வகையான இயற்கை நார்களில் இருந்து புடவை உள்ளிட்ட ஆடைகளை தயாரித்து சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். இவர்களுக்கு இணையாக, அனகாபுத்தூர் மகளிர் சுய உதவிக்குழுவினர் இயற்கை நார்களில் கைவினைப் பொருட்களை தயார் செய்து, சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளிலும், கடற்கரை உள்ளிட்ட மக்கள் பொழுதுபோக்கும் இடங்களிலும் விற்பனை செய்து, வருவாய் ஈட்டி வருகின்றனர். இவர்கள் தங்கள் தொழிலை மேம்படுத்த உதவுமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு தொடர்ந்து கோரிக்கை வைத்தனர். இயற்கை நார் புடவைகள் குறித்தும், நெசவாளர்களுக்கான தேவைகள் குறித்தும், "தினமலர்' நாளிதழிலும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் எதிரொலியாக, நெசவாளர்களுக்கு விரைவில் ஒரு விடிவு கிடைக்க உள்ளது. மத்திய அரசு நிறுவனமான சிறு, குறு, நடுத்தர தொழில் மையம் (எம்.எஸ்.எம்.இ.,), காதி கிராம தொழில் கமிஷன் மற்றும் மாவட்ட தொழில் மையம் இணைந்து ஒரு கோடி ரூபாய் செலவில் நாட்டிலேயே முதல் முறையாக அனகாபுத்தூரில், இயற்கை நார் நெசவு மற்றும் கைவினைப் பொருட்கள் குழுமம் அமைக்க முடிவு செய்துள்ளன.

இதன் மூலம், நார்களை பிரித்தெடுக்கும் நவீன இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இந்த குழுமத்தை அமைக்க இடவசதி செய்து தருமாறு இந்த அமைப்புக்கள் சார்பில், மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. நெசவாளர் சேகர் கூறுகையில், "இந்த குழுமம் அமைக்க மாநில அரசு விரைந்து இடம் ஒதுக்கித்தர வேண்டும். எம்.எஸ்.எம்.இ., நிறுவனத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் ஓரிரு மாதங்களில் இயற்கை நார் நெசவு குழுமத்தை அமைத்து தருவதாக அதிகாரிகள் கூறினர். இந்த குழுமம் செயல்படும் பட்சத்தில் நூற்றுக்கணக்கான நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்' என்றார்.

**வனவளர்ச்சி மேம்பாட்டு கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,22:55 IST

தர்மபுரி: தர்மபுரியில் வனத்துறை சார்பில் தேசிய காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் வனவளர்ச்சி மேம்பாட்டு பொதுக்குழு கூட்டம் நடந்தது.
தர்மபுரி வனமேம்பாட்டு முகமை தலைவர் இக்ராம்முஹம்மத்ஷா தலைமை வகித்தார். பென்னாகரம் வனச்சரகர் ஜெயபால் வரவேற்றார். தர்மபுரி மாவட்ட வன அலுவலர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். "தொப்பூர் உயிர் எரிபொருள் யூனிட் எண்ணை பிழியும் பகுதி தேய்மானம் ஏற்பட்டதை சரிசெய்ய வேண்டும். புங்கன்கொட்டைகளை ஏற்கனவே சப்ளை செய்த வன வளர்ச்சி முகமை வனக்குழுவுக்கு தொப்பூர் உயிர் எரிபொருள் பூனிட் நிதியிலிருந்து தொகை வழங்கிட வேண்டும். கறவை மாடு மற்றும் செம்மறி ஆடு வாங்க வழங்கப்பட்ட கடன் தொகைகள், பென்னாகரம் சரக திட்ட கிராமங்களில் சுழற்சி நிதியிலிருந்து வனக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கிய கடன் ஆகியவை வசூலிக்கப்பட வேண்டும். வத்தல் மலை பெரியூர் பகுதிக்கு தண்ணீர் வசதி வசதி ஏற்படுத்த குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.
மாவட்ட பஞ்சாயத்து குழு தலைவர் வெங்கடேஸ்வரன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் ஞானஉபகாரம், வேளாண் அலுவலர் அசோகன், வனச்சரகர் வரதராஜன், ஊரக விறகு மரச்சரகம் வனச்சரகர் பெருமாள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**தென்னையை தாக்கும் கருத்தலை புழுக்கள் : கா.பட்டணம் விவசாயிகள் பெரும் கலக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,22:58 IST

கிருஷ்ணகிரி: காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் தென்னையில் கருந்தலை புழுக்கள் தாக்குதல் அதிகரித்து தென்னை மரங்கள் பட்டு போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் தென்னை விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.
தமிழகத்தில் தென்னை சாகுபடியில் கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளது. குறிப்பாக தென்பெண்ணை ஆற்று கரையோர பகுதிகளான திம்மாபுரம், காவேரிப்பட்ணம், பென்னேஸ்வரமடம், நெடுங்கல், மருதேரி, விளங்காமுடி, பாரூர், அரசம்பட்டி மற்றும் மாவட்டத்தின் நீர்பிடிப்பு பகுதிகளில் 14,000 ஹெக்டேரில் வீரிய ஒட்டுரகம், நெட்டை ரகம் என மொத்தம் 3 லட்சத்து 20 ஆயிரம் தென்னை மரங்கள் உள்ளன. இங்கு விளையும் தேங்காய்கள் வெளி மாநிலங்களுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
தென்னையில் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டதால் தென்னை விளைச்சல் பாதிப்படைந்து பல இடங்களில் விவசாயிகள் தென்னை மரங்களை வெட்டி விட்டனர்.

ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் செய்த காரணத்தால் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஓரளவுக்கு கட்டுக்குள் வந்தது. இந்நிலையில், காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் தற்போது தென்னையில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் தென்னை மரங்கள் காய்ந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காற்றில் பரவும் கருந்தலை புழுக்கள் தென்னை ஓலையில் அமர்ந்து பச்சையத்தை உறிஞ்சுகிறது. இதனால் மரத்தில் உள்ள தென்னை ஓலைகள் வெளிரி காணப்படும். பச்சையம் இல்லாத காரணத்தால் ஒளிச்சேர்க்கை செய்ய முடியாமல் தேங்காய் விளைச்சல் பாதிப்பக்கப்படுவதோடு மரங்கள் காய்ந்து போகும். ஒரு தேங்காயின் விலை, 5 ரூபாயில் இருந்து, 7 ரூபாய் வரை விற்பனை செய்யும் நேரத்தில் காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் தற்போது கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் தென்னை விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இந்நோயை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண் துறையினர் கூறியது: பொதுவாக வெப்பக்காலங்களில் தென்னையில் கருந்தலை புழுக்கள் தாக்குதல் அதிகம் இருக்கும். மேலும், நீர் நிலையோரங்களில் உள்ள தென்னை மரங்களை இந்த வகை புழுக்கள் அதிகம் தாக்கும்.

கருந்தலை புழுக்களை ஆரம்பத்தில் அழிக்காமல் விட்டு விட்டால் நோய் தாக்கிய மரங்கள் அனைத்தும் நாளடைவில் பட்டு போகும். கருந்தலை புழுக்களை அழிக்க ஆழியாறில் உள்ள தென்னை ஆராய்ச்சி மையம் ஒட்டுன்னிகளை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

இந்த ஒட்டுண்ணி பூச்சிகளை விவசாயிகள் வாங்கி தென்னை மரங்களில் ஒரு ஹெக்டேருக்கு, 30 பூச்சிகள் வீதம் விட்டால் கருந்தலை புழுக்களை ஒட்டுண்ணி பூச்சிகள் சாப்பிட்டு அழிக்கும்.

கருந்தலை புழுக்களை அழிக்க வேர் மூலமும் மருந்தினை செலுத்தலாம். மோனோகுரோட்டோ பாஸ், 15 மில்லியுடன், 15 மில்லி தண்ணீர் கலந்து டியூப் மூலம் வேரில் செலுத்தி நோயை கட்டுப்படுத்தலாம். கருந்தலை புழுக்கள் காற்றில் பரவும் தண்மை கொண்டதால் விவசாயிகள் அந்தந்த பகுதியில் ஒருங்கிணைந்து நோய் கட்டுப்பாட்டு முறைகளை செய்ய வேண்டும். ஒருவர் மட்டும் தனக்கு சொந்தமான தோட்டத்தில் கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்தும் முறைகளை கையாண்டால் பலன் இருக்காது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பால் வரத்து 45 சதவீதம் சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,21:21 IST

அன்னூர் : பால் உற்பத்தியாளர் போராட் டத்தால் ஆவின் பால் குளிரூட்டும் மையங்களுக்கு பால் வரத்து 45 சதவீதம் குறைந்தது. போலீஸ் பாதுகாப்புடன் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அடர் தீவனங்களின் விலையுயர்வு, பால் உற்பத்தி குறைவு ஆகியவற்றால், அரசு தரும் பால் கொள்முதல் விலை கட்டுபடியாகவில்லை. பசும்பாலுக்கு லிட்டருக்கு ஐந்து ரூபாயும், எருமைப்பாலுக்கு எட்டு ரூபாயும் உயர்த்தி வழங்க வேண்டும், என்று கோரி தமிழ்நாடு பால்

உற்பத்தியாளர்கள் நலச்சங்கம் கடந்த 7ம் தேதி முதல் பால் உற்பத்தி நிறுத்த போராட்டத்தை அறிவித்துள்ளது. அன்னூர் மற்றும் இலுப்பநத் தத்தில் ஆவின் பால் குளிரூட்டும் மையங்கள் உள்ளன. இந்த மையங்களின் கீழ் 154 பால் உற்பத்தியாளர்கள் மையங்களில் பால் கொள்முதல் செய்யப்பட்டு ஆவினுக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கு குளிரூட்டப்பட்டு கோவை ஆவின் தலைமை நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, பின் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. அவிநாசி, சிறுமுகை, மேட்டுப் பாளையம், காரமடை உள்ளிட்ட ஊர்களிலிருந்து தினமும் எட்டு வழித்தடங்களில் பால் கொண்டு வரப்படுகிறது. வேலை நிறுத்தத்துக்கு முன் தினமும் 46 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. வேலை நிறுத்தம் துவங்கிய முதல் நாள் கொள்முதல் 10 ஆயிரம் லிட்டர் குறைந்தது. கடந்த இரண்டு நாட்களாக பால் கொள்முதல் 46 ஆயிரத்திலிருந்து 26 ஆயிரம் லிட்டராக குறைந்து விட்டது. பால் கொள்முதல் வாகனங்கள் போலீஸ் பாதுகாப்புடன் இயக்கப்பட்டன. இதே நிலை தொடர்ந்தால் ஆவின் வாடிக்கையாளர்களுக்கு பால் சப்ளை செய்வதில் சிக்கல் ஏற்படும்.

**தோட்டக்கலைத்துறை உதவியை எதிர்பார்க்கும் பீட்ரூட் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,21:54 IST

சுல்தான்பேட்டை : சுல்தான்பேட்டை, பல்லடம் ஒன்றியங் களில் பி.ஏ.பி., பாசன வசதி பெறாத பீட்ரூட் விவசாயிகளுக்கு, தோட்டக் கலைத் துறை தேவையான உதவிகளை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

சுல்தான்பேட்டை ஒன்றியம், செலக் கரிச்சல், இடையர்பாளையம், போகம் பட்டி, வடவள்ளி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் பீட்ரூட் விவசாயம் முதன்மை யாக உள்ளது. பெரும்பாலான விவசாயிகள், பீட்ரூட் பயிருக்கு எவ்விதமான உதவி களையும் பெறுவதில்லை. விதை ஊன்றி, 50 நாளில் அறுவடைக்கு வருகிறது. ஏக் கருக்கு 30 ஆயிரம் வரை செலவிடப்படு கிறது. நல்ல விளைச்சல் இருந்தால், 10 டன் பீட்ரூட் கிடைக்கும்.

ஒரு கிலோ பீட்ரூட் ஐந்து ரூபாய்க்கு மேல் விற்றால் மட்டுமே நஷ்டம் ஏற் படாது. ஒவ்வொரு ஆண்டிலும் அதிக மான நாட்கள் ஐந்து ரூபாய்க்கு குறைவாக விற்கிறது. சில நாட்களில் ஒரு ரூபாய்க் கும் விற்க முடியாமல் தேக்க நிலை உள்ளது. அதிகளவிலான விளைச்சல் இருப் பதால், உழவர் சந்தைகளில் அனைத்து விவசாயிகளாலும் சந்தைப்படுத்த முடிவ தில்லை. இதனால், திருப்பூர், கோவை, மேட்டுப்பாளையம் காய்கறி மார்க்கெட் டுக்கு கொண்டு செல்கின்றனர். மேட்டுப்பாளையத்துக்கு கொண்டு சென்றால், மூட்டை (80 கிலோ) ஒன்றுக்கு 100 ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. கோவை, திருப்பூருக்கு கொண்டு செல்ல, சிப்பத்துக்கு 50 ரூபாய் வரை செலவு ஏற்படும். விற்பனை செய்வ தற்கும், அதிக செலவு ஏற்படுகிறது. மழை காலத்தில் அழுகல், நோய் தாக்குதல், வெயில் நாட்களில் மகசூல் குறைவு, தண்ணீர் பிரச்னையை சந்திக்கின்றனர்.

பல்லடம், சுல்தான்பேட்டை ஒன்றியங் களில் பி.ஏ.பி., பாசன வசதி பெறும் விவ சாயிகளுக்கு மட்டும் மானியம், இடு பொருள் உள்ளிட்ட தோட்டக்கலைத்துறை யின் உதவி கிடைக்கிறது. இதர, விவசாயி களுக்கு இல்லை. பி.ஏ.பி., பாசன வசதி பெறாத, கரடிவாவி, எஸ்.அய்யம்பாளையம், செலக்கரிச்சல் உள்ளிட்ட கிராமங்களில் பீட்ரூட் விவசாயம் அதிகம். இப்பகுதி விவசாயிகளுக்கும், மானிய விலையில் உதவி கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கொள்முதல் நிலையம் இல்லாததால் கண்வலி செடி விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,22:02 IST

குஜிலியம்பாறை : கண்வலிசெடி விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள், விதை மகசூல் எடுத்துள்ள நிலையில் அரசு கொள்முதல் நிலையம் இல்லாததால் விற்பனை செய்ய வழி தெரியாமல் தவித்து வருகின்றனர்.

மூலிகைப் பயிரான கண்வலி செடி விவசாயத்தில், குறைந்த செலவில் கூடுதல் லாபம் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குஜிலியம்பாறை, ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தயம், வடமதுரை உள்ளிட்ட பகுதிகளில் கண்வலி விவசாயம் பரவலாக செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு,ஒரு கிலோ கண்வலிசெடி கிழங்கு ரூ.350 முதல் ரூ.600 வரையும், விதை ஒரு கிலோ ரூ.ஆயிரத்திற்கும் வெளியூர் வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இந்த ஆண்டு, ஆடிப்பட்டம் பயிரிட்ட பயிர்களில் இருந்து, ஒரு மாதத்திற்கு முன்பே(மார்கழி, தை) விதை மகசூல் எடுத்துவிட்டனர். ஆனால் விதைகளை விற்பதற்கான கொள்முதல் நிலையம் இல்லாததாலும், வெளியூர் வியாபாரிகள் வராததாலும், விதையை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

மூலிகை பயிர் சாகுபடியாளர் சங்க வட்டார தலைவர் முருகேசன் கூறுகையில்," டில்லியில் உள்ள மருந்து கம்பெனிகளுக்காக, ஈரோடு, தாராபுரம் பகுதியில் உள்ள புரோக்கர்கள்தான், இப்பகுதிக்கு வந்து வாங்கி செல்கின்றனர்.

இந்த ஆண்டு வியாபாரிகளும் வராத நிலையில், கொள்முதல் நிலையமும் இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளோம். அரசே டில்லி கம்பெனிகளுடன் தொடர்பு கொண்டு கொள்முதல் செய்ய முன்வர வேண்டும்,'என்றார்.

**விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,22:05 IST

பழநி : மக்கச்சோள விவசாயிகள் பங்கேற்கும் மாநில அளவிலான தொழில்நுட்ப பயிற்சி முகாம் தொப்பம்பட்டி அருகே வாகரை தமிழ்நாடு வேளாண் பல்கலை., மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் இன்று (பிப். 11) நடக்கிறது. காலை 9.30 மணிக்கு துவங்க உள்ள இம்முகாமில் மக்காச்சோள சாகுபடி தொடர்பான பிரச்னைகள், அரசின் சலுகைகள் போன்ற சந்தேகங்களுக்கு விளக்கம் பெறலாம்.

**மீனவர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,22:16 IST

ராமேஸ்வரம் : தங்கச்சிமடம் டாக்டர் சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம்,தேசிய மீன்வளர்ச்சி கழகம் சார்பில் மீன்களை சுகாதார முறையில் கையாளுதல் குறித்து மீனவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. தங்கச்சிமடம் கிராம வளமையத்தில் நடந்த நிகழ்ச்சியை மீன்துறை இன்ஸ்பெக்டர் சாம்ராஜ் துவக்கி வைத்தார். மைய அலுவலர் ஸ்ரீகிருபா வரவேற்றார். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர் வேல்விழி பயிற்சி அளித்தார். மண்டபம் கடலோர காவல்படை அதிகாரி பிரான்சிஸ் பேசினார். தொடர்ந்து சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கிராம வளமையத்துடன் இணைந்து செயல்படும் கருத்து பங்காளர்களுக்கான கூட்டம் நடந்தது. ஸ்ரீகிருபா வேல்விழி ஆராய்ச்சி நிறுவன செயல்பாடுகள் குறித்து பேசினார். இந்திய கடலோர காவல்படை கமாண்டிங் ஆபிசர் ஜி.வி.மாதவ், மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை சுற்றுச்சூழல் அலுவலர் ராஜேஸ்வரன், மீன்துறை உதவி இயக்குனர்கள் மார்க்கண்டேயன், சிவராமன், மாவட்ட மலேரியா அலுவலர் பாலசுப்ரமணியன் பேசினர் .தொண்டு நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**பயிருக்கு இழப்பீடு வழங்குவதில் சுணக்கம் : விவசாயிகள் தத்தளிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,22:19 IST

சிவகங்கை : சமீபத்திய மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு தொகையை அரசு ஒதுக்கியுள்ளது. ஆனால், சில அதிகாரிகள் இழுத்தடித்து, விவசாயிகளை வஞ்சிக்கின்றனர். மாவட்டத்தில் 89 ஆயிரம் எக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதுதவிர மிளகாய், வாழை, நிலக்கடலை என, ஒரு லட்சம் எக்டேரில் பயிர் நடவு செய்திருந்தனர். கடந்த அக்., நவம்பரில்

தொடர்ந்து பெய்த மழையால் கண்மாய்கள் நிரம்பியதால், உடைப்பு ஏற்பட்டு மழை நீர் விவசாய நிலங்களுக்குள் புகுந்தது. பயிர்கள் சேதமடைந்ததுடன், குலை நோய், பூச்சி தாக்குதலும் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என, விவசாயிகள், கலெக்டர் சம்பத்திடம் மனு கொடுத்தனர்.

உத்தரவு: இதன்படி வெள்ள சேதம் பாதித்த பயிர்கள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டன. நெற்பயிர்- 17,698 எக்டேர், கடலை- 357, பயறு- 93, மிளகாய்- 2542, தோட்டக்கலை பயிர்கள்- 5000 எக்டேர் பாதிப்பு என, கணக்கிடப்பட்டது. பூச்சி தாக்குதல் குறித்தும் சேகரிக்கப்பட்டது.

இழப்பீடு: இம்மாவட்டத்திற்கு, 19 கோடி 22 லட்சத்து 19 ஆயிரத்து 555 ரூபாய் இழப்பீட்டு தொகையாக, அரசு வழங்கியது. ஆனால் சில காரணங்களால் விவசாயிகளுக்கு தொகை கிடைக்கவில்லை. இதுவரை ஒன்பது கோடி ரூபாய் மட்டுமே வினியோகிக்கப்பட்டுள்ளது. "அதிகாரிகளிடம் கேட்டால் விரைவில் வழங்கப்படும் என்கின்றனர்,' என விவசாயிகள் ஆதங்கப்படுகின்றனர்.

விவசாயி ஒருவர் கூறுகையில்,""தேவகோட்டை, கண்ணங்குடி, சாக்கோட்டை, கல்லல், இளையான்குடி பகுதிகளில் டீலக்ஸ் பொன்னி பயிரிட்டோம். பால் பிடிக்கும் பருவத்தில் தொடர் மழை, பூச்சி தாக்குதலால் பாதிப்பு ஏற்பட்டது. நெல்லுக்கு 10 ஆயிரம், மிளகாய்க்கு இறவைக்கு 7,000, மானாவாரிக்கு 4,000 ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்றனர். இதுவரை கிடைக்கவில்லை. அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தினால் தான் கிடைக்கும்," என்றார்.

இதுகுறித்து கலெக்டர் சம்பத் கூறுகையில்,""இழப்பீடு வழங்கும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. ஒரு வாரத்தில் மாவட்டம் முழுவதும் வழங்கப்படும்," என்றார்.

## கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் விவசாயிகளுக்காக ‘எப்.எம்.’ ஒலிபரப்பு சேவை தொடக்கம்

*கோவை,பிப்.11–*

*கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் “வேளாண் பல்கலைக்கழக விவசாயி ‘எப்.எம்.’ என்ற பெயரில் ஒலிபரப்பு சேவை தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஒலிபரப்பு 107.4 பண்பலையில்*

தினசரி காலை 10.30 மணி முதல் மதியம் 1 மணிவரை ஒலிப்பரப்பப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப செய்திகள், அன்றாட விளைப்பொருட்களின் விலை நிலவரங்கள், வானொலி முன் அறிவிப்புகள் மற்றும் பல தகவல்களை கேட்டு அறியலாம். பல்கலைக்கழகத்தில் இருந்து 18 கிலோ மீட்டர் தொலைவுக்குட்பட்ட அனைத்து இடங்களில் கேட்கலாம்.

இந்த தகவலை வேளாண்மை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி ரவிகுமார் தியோடர் தெரிவித்தார்.

## பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு விலை சரிந்ததால் உணவு பொருள் பணவீக்கம் 13.07 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பருப்பு வகைகள் மற்றும் வெங்காயம் விலை குறைந்ததையடுத்து, ஜனவரி 29–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்கம், கடந்த ஏழு வாரங்களில் இல்லாத அளவிற்கு 13.07 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்துடன் (17.05 சதவீதம்) ஒப்பிடும்போது இது 4 சதவீதம் குறைவானதாகும்.

வெங்காயம்

சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது, பருப்பு வகைகள் விலை 8.63 சதவீதமும், உருளைக்கிழங்கு மற்றும் கோதுமை விலை முறையே 8.87 சதவீதம் மற்றும் 3.58 சதவீதமும் குறைந்துள்ளது.

ஜனவரி 22–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், இரண்டு மடங்கு அதிகரித்து இருந்த வெங்காயம் விலை, கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் குறைந்துள்ளது. இருப்பினும், முந்தைய ஆண்டின் இதே வாரத்துடன் ஒப்பிடும்போது இதன் விலை 78.64 சதவீதம் அதிகமாக உள்ளது. ஓர் ஆண்டு கால அடிப்படையில்

காய்கறிகள் (44.34 சதவீதம்), பழங்கள் (10.46 சதவீதம்), பால் (11.66 சதவீதம்) விலை அதிகரித்துள்ளது.

பருப்பு வகைகள்

நடப்பு வேளாண் பருவத்தில், கோதுமை மற்றும் பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரிக்கும் என்பதால், வரும் வாரங்களில் உணவு பணவீக்கம் மேலும் குறைய வாய்ப்புள்ளது என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நடப்பு பருவத்தில், உணவு தானியங்கள் உற்பத்தி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 6.4 சதவீதம் அதிகரித்து 23.21 கோடி டன்னாக உயரும் என மத்திய அரசு மதிப்பீடு செய்துள்ளது. கோதுமை உற்பத்தி இதுவரை கண்டிராத வகையில் 8.15 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருப்பு வகைகள் மற்றும் பருத்தி உற்பத்தியும் வரலாறு காணாத வகையில் முறையே 1.65 கோடி டன் மற்றும் 3.39 கோடி பொதிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பாரத ரிசர்வ் வங்கி

உணவு பணவீக்கம் குறைந்துள்ள நிலையில், மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம், ஜனவரி மாதத்தில் 8.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் இது 8.43 சதவீதமாக இருந்தது. எனவே, பாரத ரிசர்வ் வங்கி, முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை மேலும் உயர்த்தும் என கருதப்படுகிறது.

## 2010–ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 1.3 சதவீதம் சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு புதுடெல்லி

இந்தியாவில், சென்ற 2010–ஆம் ஆண்டில், 96.64 கோடி கிலோ தேயிலை உற்பத்தி ஆகியுள்ளது. இது, முந்தைய 2009–ஆம் ஆண்டில் 97.90 கோடி கிலோவாக இருந்தது. ஆக, நாட்டின் தேயிலை ஏற்றுமதி 1.3 சதவீதம் குறைந்துள்ளது.

*நம் நாட்டில் தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. தேயிலை உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதமாகும். இங்கு உற்பத்தி குறைந்ததால் நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் சரிவு ஏற்பட்டுள்ளது. வட மாநிலங்களில் 1.18 கோடி கிலோ அளவிற்கு உற்பத்தி குறைந்துள்ளது. தென் மாநிலங்களில் மிகக் குறைந்த அளவிற்கு சரிவு ஏற்பட்டுள்ளது. விதி விலக்காக மேற்கு வங்காளத்தில் மட்டும் தேயிலை உற்பத்தி 82 லட்சம் கிலோ அதிகரித்துள்ளது.*

*சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 31 சதவீதமாக உள்ளது. நம் நாட்டில் சி.டி.சி. மற்றும் ஆர்தோடக்ஸ் ஆகிய இரண்டு முக்கிய தேயிலை ரகங்கள் பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது நம் நாட்டில் ஒரு ஆண்டுக்கு தனிநபர் தேயிலை நுகர்வு 800 கிராம் ஆக உள்ளது. இது, பாகிஸ்தானில் ஒரு கிலோவாக உள்ளது.*

## *40 லட்சம் குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் கேரள பட்ஜெட்டில் அறிவிப்பு*

*திருவனந்தபுரம், பிப்.11–*

*கேரள மாநில சட்டசபையில் நேற்று 2011–2012–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. மாநில நிதி மந்திரி தாமஸ் ஈசாக் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அந்த பட்ஜெட்டில், வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 40 லட்சம் குடும்பங்களுக்கு கிலோ ரூ.2 என்ற விலையில் அரிசி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிதாக பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களின் மேற்படிப்பு செலவுக்காக வங்கியில் ரூ.10 ஆயிரம் டெபாசிட் செய்யப்படும் என்றும் பட்ஜெட்டில் கூறப்பட்டிருந்தது.*

*இதில், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் மொத்த தொகையையும் அரசே டெபாசிட் செய்து விடும். மற்ற குழந்தைகள் பெயரில் பாதி தொகையை அரசும், மீதியை அந்த குடும்பத்ினரும் செலுத்த வேண்டும். இதுபோன்ற பல்வேறு சிறப்பு சலுகைகள் பட்ஜெட்டில் இடம் பிடித்திருந்தன.*

## அன்னூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 266 மூடை பருத்தி ஏல விற்பனை

*அன்னூர்,பிப்.11–*

*அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று 266 மூடை பருத்தி ஏல விற்பனை நடந்தது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் டி.சி.எச். பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.7,400–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.7,870–க்கும் ஏலம் போனது. ஆர்.சி.எச். பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.6,550–க்கும், அதிகபட்சவிலையாக ரூ.6,700–க்கும் ஏலம் போனது. போல்காட் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்சி விலையாக ரு.6,500–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.6,640–க்கும் ஏலம்போனது. கொட்டு பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.1,600–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,860–க்கும் ஏலம் போனது.*

*அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 92 விவசாயிகள் 266 மூடை பருத்தி கொண்டு வந்து இருந்தனர். பருத்தியை ஏலம் எடுக்க அன்னூர், புளியம்பட்டி, சேவூர், திருப்பூர், சாமநாயக்கன்பாளையம், வெள்ளமடை, அவினாசி உள்பட பல்வேறு ஊர்களில் இருந்து வந்த வியாபாரிகள் போட்டிபோட்டு ஏலம் எடுத்தனர்.*

*இந்த தகவலை அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ரமேஷ்குமார் தெரிவித்தார்.*

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,880-2,900

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,300-3,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,450-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட டின் (வரிஉள்பட) 1,810-00

**நல்லெண்ணெய்**

குமாருகு, திருமால், பின்னையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1 குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15 கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 12,000.00
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,700-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ டின் (வரிஉள்பட) 1,195.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,300.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,110.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 620-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.10-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190,00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64,00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88,00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,700 | 90,00 |
| துவரம்பருப்பு | ரூ. 6,500 | 67,00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41,00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73,00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,700 | 70,00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38,00 |
| மொச்சை பயிறு (நாடன்) | ரூ. 5000 | 52,00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34,00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48,00 |
| நிலக்கடலை(60கி) | ரூ. 6,400 | 66,00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62,00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22,00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35,00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30,00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,பிப்.10-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. எல்.797 22எம்.எம் | ரூ. | 12,232 |
| 2. ஜெயதார் 22 எம்.எ | ரூ. | ------ |
| 3. ஜெ 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 15,136 |
| 4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம்) | ரூ. | 15,747 |
| 5. சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 16,169 |
| 6. எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 16,310 |
| 7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 22,496 |

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.10-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36-00 | புதினா | ரூ. | 16-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 20-24 | காலிப்பிளவர் | ரூ. | 16-17 |
| வெண்டைக்காய் | ரூ. | 38-36 | பொறியல் தட்டை | ரூ. | 18-20 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8-7 | பச்சை மொச்சை | ரூ. | 22-00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 7-8 | தேங்காய் | ரூ. | 13-17 |
| புடலை | ரூ. | 13-14 | பட்டாணி | ரூ. | 44-70 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22-23 | பூண்டு | ரூ. | 205-00 |
| சுரைக்காய் | ரூ. | 14-00 | கறிவேப்பிலை | ரூ. | 54-00 |
| பாகற்காய் | ரூ. | 13-14 | அகத்தி | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 24-00 | வாழைக்காய் | ரூ. | 16-00 |
| பூசணிக்காய் | ரூ. | 17-00 | திராட்சை | ரூ. | 30-54 |
| அரசாணிக்காய் | ரூ. | 10-11 | குடைமிளகாய் | ரூ. | 28-00 |
| மேராக்காய் | ரூ. | 16-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-00 | கறிபீன்ஸ் | ரூ. | 22-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 38-40 | புஸ்பீன்ஸ் | ரூ. | 28-00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 20-00 | காளான் | ரூ. | 80-140 |
| இஞ்சி | ரூ. | 32-55 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| முருங்கைக்காய் | ரூ. | 90-00 | சப்போட்டா1கிலோ | ரூ. | 15-16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 25-00 | கொய்யா1கிலோ | ரூ. | 22-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20-00 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 80-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 90-100 |
| சக்கரவள்ளி கிழங்கு | ரூ. | 12-00 | சாத்துக்குடி | ரூ. | 28-00 |
| முள்ளங்கி | ரூ. | 8-12 | நெல்லிக்காய் | ரூ. | 20-10 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 32-34 | ஆரஞ்சு | ரூ. | 48-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 26-00 | வெள்ளரி | ரூ. | 13-32 |
| நூல்கோல் | ரூ. | 20-00 | புளி 1 கிலோ | ரூ. | 70-00 |
| கொத்தமல்லி | ரூ. | 20-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20-20 | அவரை | ரூ. | 22-20 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| களிகோஸ் | ரூ. | 26-00 | துவரை | ரூ. | 20-00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.20700 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21100 |
| மிளகு (வயநாடன்) | ரூ.21700 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 8500 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10300 |
| கொப்பரை நாடன் | ரூ.7000 |
| கொப்பரை ராசு | ரூ.7150 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6850 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.7000 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7700 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22300 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 21600 |
| ரப்பர் பால் | ரூ. 17000 |
| காப்பி | ரூ. 9000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2850 |
| நேந்திரகாய் | ரூ. 1250 |
| இஞ்சி | ரூ. 1300 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.10-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 85.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1220 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1530 | 100.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 63.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| வில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | - |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.630.00 | ரூ. 700.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 4.00 | ரூ. 6.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.20.00 | ரூ.28.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.4.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.20.00 | ரூ.8.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.22.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| மேராக்காய் | ரூ.7.00 | ரூ.10.00 |

**பட்டுக்கூடு**

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.336.00 | அதிகபட்சவிலை | ரூ.420.00 |
| சராசரி விலை | ரூ.333.60 | சராசரி விலை | ரூ.394.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.330.00 | குறைந்தபட்சவிலை | ரூ.380.00 |

**பட்டு நூல் ரூ.2,640**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,112.00 | 15,248.00 | 15,280.00 |
| ஒரு கிராம் | 1,889.00 | 1,906.00 | 1,910.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 46400.00 | 48,500.00 | 48,000.00 |
| ஒரு கிராம் | 49.65 | 48.50 | 48.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**பருத்தி (அன்னூர்)**

| | |
|---|---|
| டி.சி.எச் | ரூ.6600-6930 |
| ஆ.சி.எச். | ரூ.5800-6200 |
| எம்.சி.யு.5 | ரூ.6100-6350 |
| எல்.ஆர்.ஏ. | ரூ.5000-5500 |

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனிவிராலி | ரூ.10616-13200 |
| தனிகிழங்கு | ரூ.11535-13000 |

**தேங்காய்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ.700-800 |
| மடத்துக்குளம் | ரூ.500-600 |
| செஞ்சேரி | ரூ.500-550 |
| பொள்ளாச்சி | ரூ.500-910 |
| பெதப்பம்பட்டி | ரூ.500-600 |
| ஆனைமலை | ரூ.500-700 |

**தேங்காய் பருப்பு**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.6000-6200 |
| ஆனைமலை | ரூ.5905-6510 |

**மக்காச்சோளம்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ.970-1050 |
| செஞ்சேரி | ரூ.980-1020 |
| பெதப்பம்பட்டி | ரூ.970-960 |
| மடத்துக்குளம் | ரூ.980-980 |

**நெல்**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.850-950 |
| ஆனைமலை (ஏ.டி.சி.45) | ரூ.850-900 |

**புகையிலை**

| | |
|---|---|
| காரமடை (ராசக்காபுகையிலை) | ரூ.2000-2400 |

**கொண்டகடலை**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.2800-2900 |